அசல்

17.1.1934 V.V. Ramanan

அசல் – 1 நகல் – 1

பதில் எழுதியது. பக்கம் (9)
20/12/37
N. S.

வேதாரண்யம்
17.1.1934

அநேக கோடி ஸாஷ்டாங்க நமஸ்காரம். உபயத்ர க்ஷேமோபரி.

பிள்ளையவர்கள் சரித்திரத்தை இரண்டொரு தினங்களாக மனம் வந்த வேளையெல்லாம் படித்து வருகிறேன். படிக்கிறது இல்லைபோலத் தங்களது தமிழ் நடையைப் படிக்கப் படிக்க மேலும் மேலும் தெவிட்டாது. ஆங்கில மொழியாளர்களில் பெயர்பெற்றவர்களது வசன நடை இவ்வாறாமே.

ஏதோ விசேஷமாக ஆறுமுக நாவலர், [illegible] ராமலிங்கபிள்ளை, வீரமாமுனிவர், தாயுமானவர் இவர்களது வடிவம் எவ்விதம் அமைந்திருந்தது என்பது தெரியவருகிறது. பிள்ளையவர்களின் வடிவப்பு [illegible] பதிலாக தங்களது திவ்ய வாக்கினால் அவ்வடிவத்தை ஆங்கில நாவலாசிரியர்களின் பாங்கைத் தழுவி வர்ணித்துக் கொடுத்தால் பிள்ளையவர்களின் சரித்திரம் பெருமை அடையும். சரித்திரத்தின் இரண்டாவது பாகத்தில், பொருத்தமான இடத்தில், அவ்விதம் செய்தால் அழகாகவே [illegible] [illegible] என்பது அடியேனுடைய கொள்கை.

இரண்டாவது பாகம் வெளியானதும் அதிலுள்ள விஷயங்களை தெரிந்து கொண்டு, பிள்ளையவர்களின் உருவத்தை ஸாவணத்திரியாய் கவிதை,

அசல்

17.1.1934 V.V. Ramanan

அசல் – 1 நகல் – 1

~~பிரசுரிக்க~~

20/10/27

அசல்

17.1.1934 V.V. Ramanan

அசல் – 1 நகல் – 1

3)

புறப்படுத்தும் இல்லாமல் செய்திருக்கிறேன்
வெளியாருக்கு என் மனம் அஞ்சுகிறது.

என் தமிழில் உள்ள குறையும் வேறு
தமிழ் பண்டிதர்களிடம் கேட்டுக்கொண்டே
இருந்தேன். தமிழில் எழுதும் பழக்கம் எனக்கு பெரு
வாய் இல்லாமையால் அதற்கான தேர்ச்சி ஏ
ற்படவும் இல்லை. தங்கள் வேண்டுகோளில் நான்
தமிழ் எழுத உரிமையுற்றேன்

என்றும் அன்புள்ள
ஸாஷ்டாங்கநமஸ்காரம்
[illegible]

-- — [illegible]

V.V. Ramanan

Brahmaśrī
Mahāmahopādhyāya, Dākṣiṇātyakalānidhi
Dr. U.V. Swaminatha Aiyar Avl
D.Litt. etc., etc.,
Madras

அசல்

17.1.1934 V.V. Ramanan

அசல் – 1 நகல் – 1

p. 198 – ௨00. தி.க. பட்டு 2)

பின்னிட்டு, தங்களால் வெளியிடப்படுகிற
வரலாற்றின் துணையால், உசிதமான ஆதேசத்து-
டன், வண்ணன் மாதிரியில் பிரசுரிக்கப்படும் சிறு
ஆங்கில பதார்த்த கோட்டைச்சக்கரத்தில் பிர
சுரம் செய்யவேண்டும் என்ற ஆவல் எனக்கு
இருந்திருக்கிறது. அவ்வண்ணம் செய்ய
பிள்ளையவர்களின் உத்தரவும் இன்னதென்று
நிச்சயமாய் தெரியவேண்டியிருக்கிறது. உத்தர
ஸ்தலத்தின் அந்தரங்க நோக்கங்களைக்
காட்ட துரைத்தின சம்பந்தமுள்ள [illegible]
பிறகு இருந்தால் உதயமாகும் மசியின் பாகங்களை
விவரங்களைத் தெரிந்து கொள்வது காரியத்தாமதத்திற்
கு பெறுமை. ஆதலால் உத்தரவுஸ்தலத்தை சுவாமி
தெரிவிக்கும்படி தங்களை வேண்டிக்கொள்
கிறேன். பிள்ளையவர்களுடைய உத்தரவை
யத்தில் அவர்களுடைய தகப்பனார் அவதாரத்தில்
இருந்ததாக தெரிகிறது அவர்களுடைய
தாயார் ஸ்வஸ்தியத்தில் இருந்தார் என்பது வெளி
ப்படையாக தெரியவில்லை. பெரியவர் தமிழ்
நாயகன், காலஞ்சென்ற இடத்தில் அவரது பின்னையான
நிலைப்பது இல்லை. ஆதலால் தங்களுடைய

நகல்

வேதாரணியம்
17/1/1934.

அனேககோடி சாஷ்டாங்க நமஸ்காரம் உபயக்ஷேமோபரி.

பிள்ளையவர்கள் சரித்திரத்தை இரண்டு மூன்று தினங்களாக மனம் வந்த போதெல்லாம் படித்துவருகிறேன் பனிநீரினது இயல்பை யொத்த தங்கள் தமிழ் நடையைப் படிக்கப் படிக்க ஒருவருக்கும் தெவிட்டாது. ஆங்கில மொழியாளர்களில் பெயர் பெற்றவர்களது வசனநடை இவ்வண்ணமே.

ஏதோ ஒருவாயிலாக ஆறுமுக நாவலர் கருங்குழி ராமலிங்கம்பிள்ளை, வீரமாமுனிவர், தாயுமானவர், இவர்களது வடிவம் எவ்விதம் அமைந்திருந்தது. என்பது தெரியவருகிறது. பிள்ளையவர்களின் வடிவப்படத்திற்கு பதிலாக தங்களது திவ்யவாக்கிலே அவ்வடிவத்தை ஆங்கிலநாவலாசிரியர்களின் பாங்கைத் தழுவி வர்ணித்துக்கொடுத்தால் பிள்ளையவர்களின் சரித்திரம் பெருமையை அடையும். சரித்திரத்தின் இரண்டாவது பாகத்தில் பொருத்தமான இடத்தில் அவ்விதம் செய்தால் அனைவருக்கும் தப்பாமல் திருப்தியைத் தரும் என்பது அடியேனுடைய கொள்கை.

இரண்டாவது பாகம் வெளியானவுடன் அதிலுள்ள விபரங்களைத் தெரிந்து கொண்டு பிள்ளையவர்களின் ஜாதகத்தை ஸாயன ரீதியாய் கணித்து குண்டலியை தங்களால் வெளியிடப்பட்டிருக்கும் வரலாற்றின் துணையால் உசிதமான ஆதேசத்துடன், லண்டன் மாநகரில் பிரசுரிக்கப்படும் ஒரு ஆங்கில மாதாந்தர ஜோதிட சஞ்சிகையில் ப்ரகடனம் செய்ய வேண்டும் என்ற அவா எனக்கு நிகழ்ந்திருக்கிறது. அவ்வண்ணம் செய்ய பிள்ளையவர்களின் ஜன்மஸ்தலம் இன்னதென்று நிச்சயமாய் தெரியவேண்டியிருக்கிறது. ஜன்மஸ்தலத்தின் அக்ஷாம்ச ரேகாம்சங்களைக் கொண்டு துருவத்தின் லம்பையைக் கண்டுபிடித்து பிறகு கிழக்கில் உதயமாகும் ராசியின் பாகை கலை விகலைகளைத் தெரிந்து கொள்

நகல்

page 197 தேதி 17-1-34

வது. கணிதசாஸ்திரத்தின் முறைமை ஆ-
தலால் ஜன்மஸ்தலத்தைச் சுட்டித் தெரிவிக்-
கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன்
பின் ஐயவர்களுடைய ஜன்ம சமயத்தில்
அவர்களுடைய தகப்பனார் அதவத்தூரில்
இருந்ததாகத் தெரிகிறதே தவிர அவர்களு-
டைய தாயார் எவ்விடத்திலிருந்தாளென்பது
வெளிப்படையாகத் தெரியவில்லை.
பொதுவாய் தமிழ்நாட்டில் கணவனது இல்-
லத்தில் அவனது மனையாள் பிரசவிப்பது
இல்லை. ஆதலால் தங்களுடைய
உதவியில்லாமல் ஏதொரு தீர்மானத்
திற்கு வருவதற்கு என்மனம் அஞ்சுகிறது.

என் தமிழில் உள்ள குற்றம்
கோதுகளை மன்னிக்குமாறு கேட்டுக்கொ-
ள்கிறேன். தமிழில் எழுதும் பழக்கம்
எனக்கு பொதுவாய் இல்லாமைபற்றி
அதற்கான ஆற்றல் என்னிடம் இல்லை
தங்கள் முன்னிலையில் நான் தமிழ்
எழுத உரிமையற்றவன்.

இதனுடன் அனேககோடி
சாஷ்டாங்க நமஸ்காரம்
தங்கள் விதேயன்,
V.V. Raman

17.1.1934

P. 198–200.
தி. க. Vol II